# அறவாணர் சாதனை விருது

# 2013




தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பாடுபடும் ஒரு ஆளுமைக்கு ஆண்டு தோறும் தமிழறிஞர் க.ப. அறவாணன் அவர்களின் தலைமையில் இயங்கும் அமைப்பின் மூலமாக ‘ அறவாணர் சாதனை விருது ‘ வழங்கப்படுகிறது. இந்தவகையில் 2013 ஆம் ஆண்டிற்கான ‘ அறவாணர் சாதனை விருது ‘ த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கு சென்னையில் தமிழறிஞர் க.ப. அறவாணன் அவர்களது இல்லஅரங்கில் 09.08.2013 ஆம் தேதி நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

தமிழறிஞரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான முனைவர் க.ப.அறவாணன் , அவரது மனைவியும் பேராசிரியருமான முனைவர் தாயம்மாள் அறவாணன் மற்றும் பல தமிழ்ச் சான்றோர்கள் முன்னிலையில் இவ்விருது வழங்கப்பட்டது.